முதன்மை உதவி அமர்வு நீதிமன்றம். விழுப்புரம்.

**S.C.No.189/2023**

**(LW -10) (PW - 4)**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | லோகநாதன் | மதம் | |
| **த.பெ.** | சந்திரகாசு | தொழில் | |
| ஊர் | வளவனூர் | வயது | 42 |
| மாவட்டம் | விழுப்புரம் | தேதி | 24,09,2025 |

இன்று (24.09.2025) சாட்சி சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.

3 மற்றும் 4 எதிரிகள் ஆஜர் , 1,2 எதிரிகள் ஆஜரில்லை . மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது.

**சத்தியமாக சொல்கிறேன்**

**முதல் விசாரணை**

நான் வளவனூர் ஈஸ்வரன் கோவில் தெரு வசித்து வருகிறேன் வழக்கு பற்றி எதுவும் தெரியாது போலீசார் கேட்டதற்காக காவல் நிலையத்தில் வைத்து நான் கையெழுத்து போட்டு கொடுத்தேன் தற்போது என்னிடம் காட்டப்படும் மணிகண்டன் என்ற ஜின்னா என்கிற சின்னமணி என்பவரின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 2 வது கையெழுத்து என்னுடையதுதான் அந்த கையெழுத்து மட்டும் அ.த.சா.ஆ 4. 30.4.2013 தேதியிட்ட 10.30 மணிக்கான கைப்பற்றுதல் மசரில் உள்ள 2 வது கையெழுத்து என்னுடையது தான் அந்த கையெழுத்து மட்டும் அ.த.சா.ஆ 5. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி , குறுக்கு விசாரரைண செய்ய அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டது.

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் வளவனூரில் வசித்து வருகிறேன் என்றும் எனக்கு கூலி வேலை என்றும் 30.4.2013-ம் தேதி காலை நானும் பிரகாஷ் என்பவரும் வளவனூர் காவல் நிலையத்திற்கு புல்லு செதுக்கும் கூலி வேலைக்கு சென்று இருந்தோம் என்றும் அப்போது காவல் ஆய்வாளர் அழைத்ததின் பேரில் போலீஸ் காவலில் இருந்து விசாரிக்கப்பட்ட மணிகண்டன் என்கிற ஜின்னா என்கிற சின்னமணி என்பவரை காவல் ஆய்வாளர் எங்கள் முன்னணியில் விசாரித்தார் என்றும் அப்போது அந்த நபர் தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தினை எங்கள் முன்பு பதிவு செய்தார் என்றும் அதில் நான் சாட்சியாக கையெழுத்து விட்டோம் என்றும் அந்த ஒப்புதல் வாக்குமூல தகவல் படி டிவிஎஸ் ஸ்கூட்டி என்ற வண்டியினை கைப்பற்றுதல் பகுதியில் கைப்பற்றினார் என்றும் போலீஸ் விசாரணை சொல்லிவிட்டு தற்போது எதிரிகளை காப்பாற்ற உண்மை மறைத்து பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

எதிரிகள் தரப்புவழக்கறிஞர் ஆஜர், எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை எது வும் இல்லை என தெரிவிக்கப்பட்டது, குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது,

Taken down before me in Open Court and read over/interpreted to the witness and acknowledged by him/her to be correct.
**Sd/-A.Tamilselvan, M.L.,**
Principal Subordinate Judge,
Villupuram

முதன்மை உதவி அமர்வு நீதிமன்றம். விழுப்புரம்.

**S.C.No.189/2023**

**(LW -9) (PW - 3)**

| பெயர் | பிரகாஷ் | மதம் | |
|---|---|---|---|
| **த.பெ.** | தங்கராசு | தொழில் | |
| ஊர் | வளவனூர் | வயது | 40 |
| மாவட்டம் | விழுப்புரம் | தேதி | 24,09,2025 |

இன்று (24.09.2025) சாட்சி சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.

3 மற்றும் 4 எதிரிகள் ஆஜர் , 1,2 எதிரிகள் ஆஜரில்லை . மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது.

சத்தியமாக சொல்கிறேன்

முதல் விசாரணை

நான் வளவனூர் ஈஸ்வரன் கோவில் தெரு வசித்து வருகிறேன் வழக்கு பற்றி எதுவும் தெரியாது போலீசார் கேட்டதற்காக காவல் நிலையத்தில் வைத்து நான் கையெழுத்து போட்டு கொடுத்தேன் தற்போது என்னிடம் காட்டப்படும் மணிகண்டன் என்ற ஜின்னா என்கிற சின்னமணி என்பவரின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 1 வது கையெழுத்து என்னுடையதுதான் அந்த கையெழுத்து மட்டும் அ.த.சா.ஆ **2.** 30.4.2013 தேதியிட்ட 10.30 மணிக்கான கைப்பற்றுதல் மசரில் உள்ள 1 வது கையெழுத்து என்னுடையது தான் அந்த கையெழுத்து மட்டும் அ.த.சா.ஆ **3**. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி , குறுக்கு விசாரரைண செய்ய அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டது

அரசு தரப்பில் குறுக்கு விசாரணை

நான் வளவனூரில் வசித்து வருகிறேன் என்றும் எனக்கு கூலி வேலை என்றும் 30.4.2013-ம் தேதி காலை நானும் லோகநாதன் என்பவரும் வளவனூர் காவல் நிலையத்திற்கு புல்லு செதுக்கும் கூலி வேலைக்கு சென்று இருந்தோம் என்றும் அப்போது காவல் ஆய்வாளர் அழைத்ததின் பேரில் போலீஸ் காவலில் இருந்து விசாரிக்கப்பட்ட மணிகண்டன் என்கிற ஜின்னா என்கிற சின்னமணி என்பவரை காவல் ஆய்வாளர் எங்கள் முன்னணியில் விசாரித்தார் என்றும் அப்போது அந்த நபர் தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தினை எங்கள் முன்பு பதிவு செய்தார் என்றும் அதில் நான் சாட்சியாக கையெழுத்து விட்டோம் என்றும் அந்த ஒப்புதல் வாக்குமூல தகவல் படி டிவிஎஸ் ஸ்கூட்டி என்ற வண்டியினை கைப்பற்றுதல் பகுதியில் கைப்பற்றினார் என்றும் போலீஸ் விசாரணை சொல்லிவிட்டு தற்போது எதிரிகளை காப்பாற்ற உண்மை மறைத்து பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

எதிரிகள் தரப்புவழக்கறிஞர் ஆஜர், எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை எது வும் இல்லை என தெரிவிக்கப்பட்டது, குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது,

Taken down before me in Open Court and read over/interpreted to the witness and acknowledged by him/her to be correct.
**Sd/-A.Tamilselvan, M.L.,**
Principal Subordinate Judge,
Villupuram

முதன்மை உதவி அமர்வு நீதிமன்றம். விழுப்புரம்.

**S.C.No.189/2023**

**(LW -3) (PW - 2)**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பாபு | மதம் | |
| **த.பெ.** | சுந்தரமூர்த்தி | தொழில் | |
| ஊர் | வளவனூர் | வயது | 48 |
| மாவட்டம் | விழுப்புரம் | தேதி | 24,09,2025 |

இன்று (24.09.2025) சாட்சி சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்பட்டது. 3 மற்றும் 4 எதிரிகள் ஆஜர் ,1,2 எதிரிகள் ஆஜரில்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது.

சத்தியமாக சொல்கிறேன்

முதல் விசாரணை

நான் வளவனூர் காகித பிள்ளை யார் கோவில் தெரு வசித்து வருகிறேன் நான் சொந்தமாக டாட்டா ஏசி லாரி வைத்து தொழில் செய்து வருகிறேன் வழக்கு பற்றி எதுவும் தெரியாது போலீசார் என்னை விசாரிக்கவில்லை அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி , குறுக்கு விசாரரைண செய்ய அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டது

அரசு தரப்பில் குறுக்கு விசாரணை

மூணு ஒன்னு 2012 அன்று மதகடிப்பட்டு சந்தையில் விழுப்புரம் கண்ணாயிரம் என்கிற மாட்டு வியாபாரி சுமார் 50 வண்டி மாடுகளை சந்தையில் விற்பனை செய்ய கொண்டு வந்தார் என்றும் இந்த மாடுகளில் ஒன்றை தண்டபாணி என்பவரும் அவருடன் வந்த நான்கு நபர்களும் விலைக்கு வாங்கி அதை கொண்டாங்கி என்ற கிராமத்திற்கு செல்ல என்னிடம் லாரியில் என்ற வாடகை பேசினார்கள் என்றும் நானும் சரி என்று ஒப்புக்கொண்டு என் லாரி டிரைவரை எடுத்து வரச் சொல்லி மாட்டை ஏற்றச் சொன்னேன் என்றும் அப்போது தண்டபாணியும் அவரும் அவருடன் வந்தவர்களும் மாட்டை ஏற்றாமல் எங்கயோ சென்று விட்டார்கள் என்றும் சற்று நேரம் பொறுத்து பார்த்து அவர்கள் வராததால் எனது டிரைவரிடம் வேறு சவாரியை ஏற்றுக்கொண்டு வண்டியை அனுப்பிவிட்டேன் என்றும் அதன் பிறகு தண்டபாணி அவருடன் வந்த நான்கு நபர்களும் மீண்டும் வந்து ஏன் சவாரிக்கு வரவில்லை என்று என்னுடன் சண்டை போட்டார்கள் என்றும் வாய் தகறார் ஏற்பட்ட போது எங்களுக்கு தெரிந்த பள்ளியந்தூர் சுப்பிரமணி என்பவர் சண்டையை விலக்கிவிட்டார் என்றும் அப்போது தண்டபாணியும் அவர்களுடன் இருந்தவர்களும் என்னை பார்த்து வெளியே வாடா உன்னை பார்த்துக்கொள்கிறேன் என்று மிரட்டி விட்டு சென்றார்கள் என்றும் அன்று மாலை கண்ணாயிரம் வேலையை முடித்துக் கொண்டு அவருடைய டிவிஎஸ் ஸ்கூட்டி அவரிடம் வேலை செய்யும் பன்னீர்செல்வம் ஓட்ட அவர் பின்னால் அமர்ந்து கொண்டு விழுப்புரம் செல்வதாக சென்றுவிட்டார்கள் என்றும் இரவு சுமார் 7 மணியளவில் எனக்கு கண்ணாயிரம் பன்னீர் மோட்டார் சைக்கிளில் செல்லும்போது செங்கராம்பாளையம் அருகே அரியாங்குப்பம் தென்னந்தோப்பு அருகில் மாலை சுமார் 6.50 மணிக்கு யாரும் மூன்று நபர்கள் ஒரு மோட்டார் சைக்கிளில் அவர்களை பின் தொடர்ந்து வந்து அவர்கள் மீது மோதி கீழே விழுந்தவர்களை மூவரும் பிடித்துக் கொண்டு யாருடா பாபு என்று கேட்டு கைகளால் அடித்ததாகவும் வழி தாங்க முடியாமல் பன்னீர்ஓடி மறைந்து கொண்டதாகவும் கழுத்தில் இருந்த பவுன் செயினையும் இடுப்பில் வலைப்பையில் வைத்திருந்த ரூல் இரண்டாயிரத்தையும் அவர்கள் ஓட்டுச் சென்ற டிவிஎஸ் ஸ்கூட்டியையும் கொள்ளையடித்து சென்று விட்டதாகவும் எனது தகவல் கண்ணாயிரம் என்பவர் சொன்னார் என்றும் உடனே நானும் சுப்பிரமணியம் அந்த சென்று கண்ணாயத்தை விசாரித்துவிட்டு பல இடங்களில் தேடி பார்த்தோம் என்றும் அந்த நபர்கள் கிடைக்கவில்லை என்றும் பிறகு

**கண்ணாயிரத்து அன்று இரவு வளவனூர் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கச் சொன்னோம் என்றும் போலீசு விசாரணை சொல்லிவிட்டு தற்போது எதிரிகளை காப்பாற்ற உண்மை மறைத்து பொய் சாட்சி மலிக்கிறேன் என்றால் சரியல்ல**

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர், எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை எதுவும் இல்லை என தெரிவிக்கப்பட்டது, குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது,

Taken down before me in Open Court and read over/interpreted to the witness and acknowledged by him/her to be correct.
**Sd/-A.Tamilselvan, M.L.,**
Principal Subordinate Judge,
Villupuram